IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 111/2018 |
| | | P/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | R. Jeganathan | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **15-09-2022**

<u>குறுக்கு விசாரணை (2, 3 பிரதிவாதிகள் தரப்பில்) :</u> **15-09-2022**

2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் கொடுக்கப்பட்ட மின் இணைப்பு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.52/1 புதிய சர்வே எண்.52/1ஏ ஆகும். நாளது தேதி வரை சர்வே எண்.52/1ஏ-ல் மின் இணைப்பு இருந்து வருகிறது. மேலும், மேற்படி மின் இணைப்பு மூலம் மின் மோட்டார் செயல்பட்டு வருகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.10ல் ராமு மகன் உலகநாதன் என்ற பெயரில் தான் வருவாய் ஆவணங்கள் உள்ளது என சாட்சியிடம் வா.சா.ஆ,10 ஆவணத்தை காட்டி கேட்கப்பட்டது. சாட்சி ஆவணத்தை பார்வையிட்டு சரி என்று சாட்சியம் அளித்தார். பொதுவாக மின் இணைப்பு வழங்கும்போது வருவாய் ஆவணங்களை பார்க்கப்படுவது வழக்கம் என்றால் பத்திரம், பட்டா, வில்லங்கம் குறித்து அனைத்து ஆவணங்களையும் கொடுக்கப்பட்டு, அதனடிப்படையில் தான் பரிசீலனை செய்யப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படும். வருவாய் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, சரியான விதத்தில் உள்ள காரணத்தினால் 2, 3 பிரதிவாதிகளால் ஆவணங்களின் அடிப்படையில் மின் இணைப்பு 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறு.

உங்களால் வழக்குரையில் தாவா சொத்தான பட்டா எண்.292ஐ பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக வழங்கப்பட்டுள்ள பட்டாவை பொறுத்து, செல்லத்தக்கது அல்ல என்ற விளம்புகை பரிகாரம் இந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்திட அதிகார வரம்பு இல்லை என்பதினால் உங்களால் கோரப்பட்டுள்ள இந்த 2வது பரிகாரத்தை பொறுத்து 3ம் பிரதிவாதிக்கு எதிராக கோரிய பரிகாரம் தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் அது சரியல்ல. வருவாய் ஆவணங்கள் சரியாக இருக்கும்பட்சத்தில் அவர்களுக்கு ஆதரவாக மின் இணைப்பு வழங்கப்படுவது வழக்கம் என்பதினால் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 2ம் பிரதிவாதியால் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது சரியல்ல. எங்களுடைய தரப்பில் மின்

இணைப்பை 1ம் பிரதிவாதிக்கு மாற்றம் செய்திடக்கூடாது என ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது. அதேபோல, என்னுடைய தாயாரும் தனிப்பட்ட முறையில் மின் இணைப்பு 1ம் பிரதிவாதிக்கு வழங்கிடக்கூடாது என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. மின் இணைப்பை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு ஆவணங்களின் அடிப்படையில் சரியாக கொடுக்கப்பட்டுள்ளதால் வழக்கில் உங்களால் கோரப்பட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல. வழக்கு தள்ளுபடி செய்யக் கூடியது என்றால் சரியல்ல.

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி